செய்தி வெளியீடு எண் :37 நாள் :22.04.2018

***தேனி மாவட்டம்,***
***மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் 712 இளைஞர்களுக்கு தனியார்துறைகளில் பணிபுரிவதற்கான ஆணைகளை வழங்கினார்:***

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், முத்துதேவன்பட்டி தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின் முறை மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் இன்று (22.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் சார்பில் நடைபெற்ற தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 712 இளைஞர்களுக்கு தனியார்துறைகளில் பணிபுரிவதற்கான ஆணைகளையும், 160 இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்பட்டு வருகின்ற படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு எண்ணற்ற இளைஞர்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் தான் எட்டாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு, தொழில் கல்வி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடும் பொருட்டு பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், தமிழகத்தில் 2,18,414 இளைஞர்கள், இளம்பெண்களும், நமது மாவட்டத்தில் 2,500 இளைஞர்கள், இளம்பெண்களும் வேலைவாய்ப்பினை பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்கும், பெண்களின் நல்வாழ்விற்கும், ஆண்களுக்கு நிகராக பெண்கள் அனைத்து நிலைகளிலும் சம உரிமை பெறவேண்டும் போன்ற எடுத்த முயற்சிகளினால் தான் நமது மாவட்ட ஆட்சித்தலைவராக பெண் பொறுப்பேற்றிருக்கிறார்கள். பெண் குழந்தைகளை பாதுகாத்திடவும், ஆண் குழந்தைகளை மட்டும் விரும்பும் மனப்போக்கை கட்டுப்படுத்தவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ் ஒரு பெண் குழந்தைக்கு ரூ.50,000/- வைப்புத்தொகையாகவும், இரண்டு பெண் குழந்தைகளுக்கு ரூ.25,000/- வைப்புத்தொகையும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண்களின் நலனை கருத்தில் கொண்டு பெண் குழந்தைகள் வேண்டாம் ஆண் குழந்தைகளை மட்டும் விரும்பும் மனப்போக்கை தடுத்திடும் வகையில், பெண் குழந்தைகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும் 1991-ஆம் ஆண்டு தொட்டில் குழந்தை திட்டத்தினை கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தின் கீழ் வரப்பெற்ற 5,000 மேற்பட்ட குழந்தைகள் அரசின் மூலமாக தத்தேடுக்கப்பட்டு, தற்போது, பட்டதாரிகளாக, மருத்துவர்களாக, பொறியாளராக பல்வேறு நிலைகளில் அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்பட்டு வரும் தமிழக அரசு பெண் கல்வியினை ஊக்கப்படுத்திடவும், ஏழ்மையின் காரணமாக பெண்களின் திருமணம் காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் ஏழை பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி மற்றும் திருமாங்கல்யம் வழங்கும் திட்டத்தின் கீழ் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ.25,000/- நிதியுதவியும், 8 கிராம் திருமாங்கல்யத்திற்கு தங்கமும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு ரூ.50,000/- நிதியுதவியும் 8 கிராம் திருமாங்கல்யத்திற்கு தங்கமும் வழங்கி வருகிறது. பெண்கள் இல்லங்களில் படும் இன்னல்களை போக்கிடவும், பணி சுமையை குறைத்திடவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தான் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறிகள் அனைத்து இல்லத்தரசிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் நலனை கருத்தில் கொண்டு 2011-ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் திறன் வளர்ப்பு பயிற்சி முகாம்கள் நடத்திட ரூ.100 கோடி ஒதுக்கீடு, அடுத்தாண்டு ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்தும், அதற்கடுத்து ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்து இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் இன்று நடைபெற்ற முகாமில் 82 தனியார்துறை நிறுவனங்கள் பங்கேற்று, 1,434 இளைஞர்களும், 774 இளம்பெண்களும், 32 மாற்றுத்திறனாளிகள் எனமொத்தம் 2,240 இளைஞர்கள் கலந்து கொண்டவர்களில் 712 இளைஞர்கள், இளம்பெண்களுக்கு தனியார்துறை நிறுவனங்களில் பணிபுரிவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் உலக புகழ்பெற்ற எச்.ஐ.சி நிறுவனத்தில் பணபுரிவதற்கு முதற்கட்ட தேர்வில் 35 நபர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இரண்டாம் கட்ட தேர்விலும் வெற்றி இவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதுபோன்ற தமிழக அரசால் நடத்தப்படுகின்ற வேலைவாய்ப்பு முகாமில் இளைஞர்கள் கலந்து கொண்டு வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், தேனி பாராளுமான்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், மதுரை மண்டல (வேலைவாய்ப்பு) இணை இயக்குநர் திருமதி பா.அனுசியா செல்வி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி ரசிகலா அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.அ.கலைச்செல்வன் அவர்கள், முன்னாள் தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.கணேசன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**